2005 மார்ச் 18]

முற்பகல் 10–05

(இ) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எம். நரசிம்மன்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2003–2005 ஆம் ஆண்டுகளுக்கான மனுக்கள் குழுவின் நூற்று ஒன்றாவது முதல் நூற்று நான்காவது வரையிலான நான்கு அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(4) மானியக் கோரிக்கைகள், 2005–2006, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2005–2006 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீதான விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், திப்பம்பட்டி என்கின்ற குக்கிராமத்திலே பிறந்த என்னை, பொள்ளாச்சி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராக்கி, இன்று அமைச்சராகவும் ஆக்கி, உணவு மற்றும் கூட்டுறவுத் துறையின் மேலான மானியக் கோரிக்கைகளை இம்மாமன்றத்தில் தாக்கல் செய்கிற ஒரு நல்ல நிலையை எனக்கு உருவாக்கித் தந்த மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி என்னுடைய உரையினைத் தொடங்குகின்றேன்.

ஆயிரம் ஆண்டுகள் நாங்கள் செய்த தவப்பயனே அம்மா, அறிவுத் திருவுருவே அம்மா, அன்புக்குத் தாயகமே அம்மா, சூழ்ச்சி வலைகள் சுற்றிக் கிடந்தாலும் வீழ்ச்சியையே அறியாத வீரத்திருவடிவே அம்மா, கயவர்கள் எழுப்புகின்ற கனத்த தடையை எல்லாம் காலடிப் படிக்கட்டாய் மாற்றுகின்ற காவியமே எங்கள் அம்மா, ஓய்வே அறியாமல் சுழலுகின்ற பூமியைப் போல் ஓய்வே இல்லாமல் உழைக்கின்ற இலட்சிய தீபமே